REGISTERED No. M. 1318.

ஓம்.

நாமகள் நற்றுணை.

தமிழ் மகவு.

புதுவைத் தமிழ்ச்சங்கத்து மாதந்தோறும் வெளிவரும்

தமிழ்ப் பத்திரிகை.

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினுங் கற்கை நன்றே.

ஆண்டு — ௧. | காளயுக்தி வரு ஆனி மீ 1918-ம் ஆ ஜூன் மீ | மதி — ௯.

உள்ளுறை:

பக்கம்.

௧. விவேகம். ... ... ௯௭.

௨. பத்துப்பாட்டு. ... ... ௧௦௩.

௩. பாரதம்பாடிய பெருந்தேவனார் ... ... ௧௦௬.

௪. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம். ... ௧௦௭.

பத்திராசிரியர்:— வீ. துரைசாமி முதலியார்,
கவர்ன்மெண்ட் கல்விச்சாலைத் தமிழ்ப் பண்டிதர்.
புதுவை.

வருடச் சந்தா விவரம்:

உள்ளூர்க்கு ...	ரூ [illegible]	வெளிநாட்டுக்கு ...	ரூ ௧
வெளியூர்க்கு ...	ரூ [illegible]	தனிப் பிரதி ...	அணா ௧

உ

இறைவனருள்க.

புதுவைத் தமிழ்ச்சங்கத்தில் நடைபெற்ற உபந்நியாசங்கள்.

புதுமலர்ப் பொழில்சூழ் புதுவைமாநகரில், கலைப்புரி கொள்கைப் புலம்பெரி துடைய, அமிழ்துறழ் கன்னித் தமிழ்வளர் சங்கத்து, ஆரறிவாளர் சீரியல்முயற்சியால், நிகழும் காளயுக்தி௵ ஆனிமீ ஈகஉ (24-6-18) சோமவாரம் இரவு ௭ - மணிமுதல் ௮ - மணிவரையில் சென்னை லோகோபகாரிப் பத்திராதிபர் ஸ்ரீமான் கோ - வடிவேலுசெட்டியாரவர்கள் "வித்தை விரும்பு" என்பதை எடுத்துக்கொண்டு ஔவைப்பிராட்டியின் தெய்வ வாக்கின் சிறப்பையும, வித்தையின் மேன்மையையும், கல்விகற்கு முறைமையையும், கற்கப்படாத நூற்கள் சிலகால் பார்த்துவிடக் கூடிய நூல்கள் பலகால் பார்த்துச் சாந்துணையும் பயிலவேண்டிய நூற்கள் இவை இவை யென்பதையும், கல்லாரிழிவையும் பற்றி விரித்துப்பலஇனியகதைகளோடுகேட்போர்கழிபேருவகையெய்த உபந்நியாசித்தனர். பின்னர் ௮-மணிமுதல் ௯-மணிவரையில், புலிசை பண்டிதை ஸ்ரீமதி அசலாம்பிகை அம்மையவர்களால் "பூர்வீக இந்துமாதர்" என்பதை எடுததுப் பண்டைக்காலத்துத் தண்டமிழின் மிகத்தேர்ந்த ஒண்டொடிமாதர் பலருளர் என்பதும், அவர்கள் தமக்குள் சங்கங்கூடித் தமிழாராய்ந்திருந்தாரென்பதும், ஆண்பாலார் கூடியவாத சபையில் அக்கிராசனம் வகித்திருந்தாரென்பதும், அப்பாலவையர் கல்வியறிவால் தங்கணவர்க்குத் தளர்வுவந்த சமையத்து உறுதிகூறி மந்திரிபோலுதவினார்களென்பதும், இன்னும் பல சிறப்புற்று விளங்கினார்களென்பதும், இக்காலத்து மகளிர்கள் பெருநூற்களில் பண்டையோர்போல் பயின்றால்தான் நன்மை விளைக்குமென்பதும், சிறந்த பத்திரிகை வாங்கிப் படிப்பது கல்விவளர்ச்சிக்குக்காரணம் என்பதும்,பிறவும் இனிய நடையில் எல்லோரும் வியக்க உபந்நியசிக்கப் பட்டது. உடனே சபையோர் உபந்நியாசகர்கட்கு நன்றிகூறினர். மங்கள வாழ்த்துடன் சபை நிறைவேறிற்று. சுபம்.

புதுவைத் தமிழ்ச்சங்கம், காரியதரிசி,

வீ. து.

ஓம்.

நாமகள் நற்றுணை.

தமிழ் மகவு.

புதுவைத் தமிழ்ச்சங்கத்து மாதந்தோறும் வெளிவரும்

தமிழ்ப் பத்திரிகை.

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினுங் கற்கை நன்றே.

ஆண்டு — க.	காளயுக்தி ௵ ஆனி ௴ 1918-ம் ௵ ஜூன் ௴	மதி — கூ.

விவேகம்.

விவேகமாவது: பகுத்தறிவு. யாதினைப் பகுத்தறியவேண்டுமோவெனின், மிருகம் பறவை முதலியவற்றின்பிறவியின் துயரையும், இழிவையும், நம்பிறப்பி னுயர்வையும், இவற்றி னிலையாமையையும் வகைப்பட உணர்தல்வேண்டும். இப்பகுத்தறிவுடையார் அரியன அறிந்து பெரியன பெறல்வேண்டும் என்பது எம்மதத்தோரும் சம்மதித்த முடிவாம். முதலில் நாம் நம்மினும் அறிவு குறைந்த மிருகாதிகளின் பிறப்பின்கண் மிக்க துக்க முண்டென்பதை யுணர்தல் வேண்டும்:

விலங்கலி லிருந்து வேங்கை முழங்குழிக்
கலங்குறு மான்றுயர் காட்டவு மாமே!
புலிகோட் பட்டுப் புழுங்கு மாட்டின்
மலிதுயர்க் குண்டோ வரம்பு கூறுமின்!
கூற்றென வேட்டைநாய் குரைத்துச் சூழ
மாற்றரு மயில்தலை வளைத்துத் தோகையில்
மறைக்குறு துயரை வரைசெய லாமோ!
அச்ச மின்றியே யறிவின் மாக்கள்

நச்சி யூனுண்ண நரகினுங் கொடிதா
ஆட்டின் றலையை யறுத்துப் புரட்டிப்
போட்டுவே றூட்டைப் புக்கிழுத்திடினே
இதுகதி யென்றே யிரங்கியங் காந்தழு(து)
அதுபடுந் துயரை யார்சொல வல்லார்!
கொக்கு முதற்பறவை கொக்கு நிலைநாடிக்
கொலைக் கருவியினாற் குறித்துச் சுட்டிட
அலைத்துயிர் நீங்கு மவதியார் காண்பார்!
உடும்புவால் ஞெண்டின் இடும்பைகொ ளுறுப்பைக்
குறைத்தரி போது கொடிதாந் துன்புறும்!
ஆமையை யுலையிட் டடுப்பி லெரிக்கிற்
றீமை யினைக்கெனத் செப்பரி தாமே!
பறவையைக் கூட்டிற் படுக்கிற் றுடித்துச்
செறிதுயர் பற்றித் திகைத்தய ரும்மே!
தறுகண் யானையுந் தான் சீயத்தால்
மறுகி யழிதுயர் வார்த்தையி னடங்கா!
தூண்டிலிற் பட்டுத் துடிக்கு மீன்கணம்
மாண்டிடுந் துன்ப முனத்தினீர் கொண்மின்!
நோய்பல கொண்டே நுடங்குமாப் பறவைக்
கேய்துயர் கூறினே ரெல்லையு முளதோ?

இத்திறமான துன்பப் பிறவிகள் எண்ணிறந்தன உள; இவற்றிற் பிறவாமல், மக்கள் யாக்கை யெய்துதல், கடல் நடு வீழ்ந்தோன் கையால் நீந்திக் கரைபேறுதல் போலவும், தென்சமுத்திரத்தினுற்ற யாமையின் கழுத்து வடகடலிற் கிடக்கு நுகத்தடியின் தொளையிற் புக்காற்போலவும் மிக அரிதினும் அரிதாகக் கிடைப்பதொன்றாம்.

இனி இத் தேகம் நிலையாமை யுடைத் தென்பது:— பொன்னும் வெள்ளியும் புணர்ந்தாலெனச் சுக்கிலமும் சுரோணிதமும் வயிற்றினிடத்தே பொருந்தி மக்கள் யாக்கை யெடுத்தற்கெய்திய பொழுதிலே, மின்னலும் நீர்க்குமிழியும் தோன்றிக் கெடுமாறுபோலக் கெடினுங்கெடும்; அங்ஙனம்

கெடாது வெண்ணெய்போல் திரண்டபின்னர்க் கெடவும்பெறும்; அதிற்கேடின்றேல், அது யாமையின் தன்மையைப் பெற்ற வளவிலே கெடவும் பெறும்; அந்நிலையிற்கெடாதேல், உருத்தெளிந்து நிறைமதிபோலக் குறையா உறுப்புடன் பிறந்து தாய்தந்தை முதலியோர் அழக்கெடினுங் கெடும்; அதிற்கேடின்றி இரவலர்க்கு நிதிமுகந் தளித்துப் பெயரிடுமளவிலே கெடினுங்கெடும்; அதிற்கேடின்றேல், பொய்கையில் மலரென வளர்ந்து கண்ணிற்கு மைதீட்டி மயிர் திருத்திப் பொன்மணிப் பணி நன்மலராதியால் அழகு செய்யப்பட்டு விளையாடி நட்டோருங் கிளையுமழக் கெடுதலையும் செயும்; அவ்வழிக்கேடின்றேல், நூல்களை முற்றக்கற்று, மகளிர் கூடி வடிவையும் இளமையையும் அழகையுங்கண்டு அனங்கனேயென்று மனங்குழைந்திரங்கப் பரிசிலர் கொடையைக் குறித்து ஏத்த விடைபோல் நடக்கின்ற காலத்தே கெடினுங் கெடும்; அதிற்கேடின்றேல், அரிவையரைப்புணர்ந்து வேறொன்றுந் தெரியாத போகநுகர்ச்சிக்காலத்தே கூற்றுவன் உயிரைவௌவுதலாலே பல்சனம் சிதைந்து முகத்தே புடைத்துக்கொண்டு அழும்படி கெடும்; அதிற் கேடின்றேல், மகளிரிடத்தேயழுந்தி அவர்பெறும் புதல்வரைக்கண்டு உவந்து காலங்கழிக்கு மளவிலே தம் சுற்றத்தாரெலாம் உடைகின்ற மரக்கலத்திலிருந்தவர்உற்ற வருத்தமுறும்படி நோயாகிய புலி பாயப்பட்டுப் பிணமாய்க்கெடும்; அதிற்கேடின்றேல், தம்போக நுகர்ச்சி மெல்ல மெல்லக் கழிதலாலே தாம் கடைப்பிடித்த எண்ணங்கள் குறைந்து ஊமர்போல உறுப்பாலே வார்த்தைகூறி (கண் கை முதலியவற்றின் குறிப்பாலே பொருளுணர்த்தி) புலால் வீசும் உடம்பாகிய குளம் ஒன்பது வாயில்களாகிய தூம்புகளும் சோரத்திறந்து உள்ளிருப்பன பாய்ந்து முடிவில் ஆம்பொருளிதுவென்று அறியாதார்க்கு அறிவித்துச் சுடுகாட்டிலே ஏறுதல் நிச்சயம்.

இஃதன்றியும், உலகமெல்லாம் பலர்க்கும் பொது என்னுஞ் சொல்லை நீக்கித் தமக்கே உரிமையாக்கி ஒருகோல் செலுத்தி ஆண்ட அரசர்க்கரசரும் நிலைபெற்றிருந்தாரிலரே! அவர் எங்குற்றனர்? அவர் ஊர்களும் பேர்களும் தெரிந்தோருமைமின்? நேற்று

நன்றாக இருந்தவன் இன்று இல்லையானான்; ஒருவன் இப்போது தான் நின்றுகொண்டிருந்தான்! இப்போதுதான் உட்கார்ந்திருந்தான்! இப்போதுதான் படுத்திருந்தான்! இப்போது இறந்து விட்டானே!! அந்தோ! இன்று இருக்கின்ற நாமும் நாளைக் கிருப்போமென்று நம்புதற் கிடமின்றே! என்று யாவரும் இரங்கற்கிடமாக உளது இவ்வுலகம். ஆகையால், இவ்வகை நிலையாதயாக்கை நிலைஇய போதே தலையாமின்பந் தலைப்படல் தகுமே. அவ்வின்பமும் முற்றறிவு முற்றுத் தொழிலையுடைய முதல்வன் பாலன்றி ஏனைத் தேவர்பாற் பெறலரிதாம். ஆதலின், அவ்வின்பப் பேற்றினிமித்தம் அவ்விறைவன் திருவடியை யடையுநெறியைக் கற்றறிந்து அவ்வாற்றான் ஒழுகல்வேண்டும். இங்ஙனமின்றி வாளாபொழுது கழிய இருந்து பின்னர் உற்றவர் பெற்றவர் மற்றவர் கூடியழ உயிர்விடும்போது, அந்தோ! இத்துணைக்காலம் இறைவனை யடையுநெறி எதுவென்று தேடியடையாமற் போனோமே! என்று தங்குறை நினைந்து தாம்புலம்பினும் அதனாற் பயனில்லை. அப்போது கடவுளருளைப் பெறுதல் கூடாது. அறிவுவந்தபோதே இறைவனை அடையவேண்டும். இதனை ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் வாய்மலர்ந்தருளிய திருவாசகத்தேனிற் கீழ்க்குறித்த பாசுரத்தானும் அறிக.

நிற்பார் நிற்கநில்லாவுலகில் நில்லோம் இனிநாம் செல்வோமே
பொற்பால் ஒப்பாந் திருமேனிப் புயங்கனாள்வான் பொன்னடிக்கே
நிற்பீரெல்லாந் தாழாதே நிற்கும்பரிசே ஒருப்படுமின்
பிற்பால் நின்று பேழ்கணித்தால் பெறுதற்கரியன் பெருமானே.

(இதன்கருத்து) "பொய்யுலகத்தில் நிலைத்திருப்போமென்றெண்ணுவோர் இருக்கட்டும். இனி நாம் இவ்வுலகில் நில்லோம் செல்வோம்; பொன்னிடத்துப் பாலுற்றாற்போன்ற திருமேனியையுடைய சர்ப்பாபரணனாகிய நம்மையாளும் இறைவன் திருவடிப் பேற்றுக்கு ஆசைப்பட்டு நிற்கு நீங்கள் எல்லீரும் தாமதம் செய்யாமல் நிற்குந்தன்மையோடு வந்து ஒருவழிப்படுங்கள்; அவ்வாறின்றிப் பின்னர் நின்று மயங்கி விழித்தால் இறைவன் பெறுதற்கு அரியனாவான்" என்பதாம்.

"நிற்கின்றபோதே நிலையுடையான்கழல்
கற்கின்றசெய்யின் கழிந்தறும்பாவங்கள்"

என்று திருமூலநாயனாருந் திருவாய் மொழிந்தருளினார்.

தாயுமான சுவாமிகளும்,

"எண்ணரிய பிறவிதனின் மானிடப்பிறவிதான்
(இ)யாதினும் அரிதரிதுகாண்
இப்பிறவிதப்பினால் எப்பிறவி வாய்க்குமோ
ஏதுவருமோ அறிகிலேன்"

என்றுகூறி, நாம் முன்பு புகன்ற பொருளை வெள்ளிடைமலைபோற் றெள்ளிதில் விளக்கினார்.

இனி இவ்வகையைப் பகுத்தறிந்து நெருப்பிற்பட்டு நொந்த குருடர் அவ்வெப்பம் நீக்க நீர்தேடுதல்போலச் சற்குருவைவிரைவில் தேடியடைந்து அவரதருளினால் முத்தி யின்பம் பெறுதலின்றி, மனைவிமக்கள் முதலிய குடும்பமென்னுஞ் சேற்றில் வீழ்ந்துழலுதல் என்னைபேதைமை! நாளைக்கே காலனதுதூதர்வந்து பாசத்தாற் கட்டி ஈர்த்துச் செல்லும்போது இம்மனைவிமக்களோ துணையாவார்? இல்லை இல்லை. இனி இம்மனைவியாதியோரை விடுத்தாற் பாதவிப்பார்களே, இவர்கட்கு வேறுதுணை ஒருவரும் இலரே எனின், இது குறித்து இறைவனது ஆனந்தத் தேனைச் சொரியும் திருவடியை மறக்கவொண்ணாது; எங்ஙனமெனின், உமது உயிரைக் காலன்கொண்டுபோனால், மீண்டுவந்து இம்மனைவியாதியரை எக்காலத்துங் காத்தல் கூடுமோ? அல்லது ஓர் கணமேனும் வந்து இவர்களை நீர் நன்றிருக்கிறீரோ வென்று கேட்கத்தான் கூடுமோ? இருக்குமளவேனுங் காப்பன் எனின், அரசர் முதலியோர் உன்னைக்கொண்டு போனாராயினும் அல்லது அவரைக்கொண்டு போனாராயினும், மருந்தினாலுந் தீராநோய் கொண்டு வருந்தும்போதாயினும் காப்பது எங்ஙனமாம்? ஆகாதன்றே? இவ்வாற்றால் நீக்கமற நிறைந்துறையும் எல்லாம் வல்ல இறைவன் றுணையேயன்றி, ஒருவர்க்கொருவர் துணையென்பது உபசாரமே; உண்மையன் றென்க. இனி உறவுயாது பகையாதெனின், கூறுதும்.

ஆணவத்தால் மறைப்புண்டு கிடந்த உயிரைத் தனது காருண்யத்தினால் எடுத்து மாயையின்கண்ணே தனுகரண புவன போகங்களைக் கொடுத்து முன்னர் விடயஞானத்தை விளக்கிப் பின்னர்ச் சுருதி குருசுவானுபவங்களினால் சொரூப ஞானத்தை விளக்கி ஆனந்தானுபவத்தைக் கொடுத்தலின் உயிர்க்கு உறவு சிவனே யென்றும், உயிரினது ஞானத்தை அநாதியே மறைத்து வீடடையு மளவுந் துன்பஞ் செய்தலின் ஆணவமலமே உயிர்க்குப் பகை யெனவும் அறிதல்வேண்டும்.

மனைவிமக்கள் முதலியோர் உறவினரன்றோ வெனின், தீவினை யனுபவிக்குங்கால் மனைவி மக்கள் முதலிய உறவினரே பகைவராய்த் துன்பஞ் செய்யவும், நல்வினை யனுபவிக்கு ஞான்று பகைவரும் உறவுகொண் டிதஞ்செய்தலின் வினைவழி வந்த சீவர்கள் பகையும் உறவும் இலரென்றறிக.

இது கொண்டன்றோ? இராமர் காட்டின்கண் வசிக்கக் கட்டளைநேர்ந்தபோது இளையபெருமாள்கண்டு நம் தமையன் கற்கள் விரவிய வெறுநிலத்தே கிடந்துறங்கக் கடவனோ? இங்ஙனம் செய்வித்த கைகேசி முதலியோரைக் கலக்குகின்றேனென்று கோபித்த போது இராமர் "இணையிலறிவுள இளையவீர! ஆற்றில் நீர் இல்லாதிருப்பது ஆற்றின் குற்றமன்றே, அதுபோல நமக்கு இப்போது விளைந்தது நம் தந்தையின் குற்றமன்று; கைகேசித்தாயின் குற்றமுமன்று; தம்பியாகிய பரதன் குற்றமுமன்று; நமது விதியின் குற்றமேயாம்; நீ யிதற்குக் கோபித்தல் தகாது." என்று கூறினர். இது:

"நதியின் பிழையன்று நறும்புன லின்மை யற்றே
பதியின் பிழையன்று பயந்து நமைப் புரந்தாள்
மதியின் பிழையன்று மகன்பிழை யன்று மைந்த
விதியின் பிழைநீ யிதற்கென்னை வெகுண்ட தென்றான்"

இக்கவியாலறிக.

இங்ஙனங் காட்டியவாற்றால் விதியால் நன்று தீதுவருமன்றிச் சீவர்களால் வாராவென்பது தேற்றமாம்.

(தொடரும்)

பத்திராசிரியர்.

135

பத்துப்பாட்டு.

(கஉ - ம் பக்கத் தொடர்ச்சி.)

அ - வது, குறிஞ்சிப்பாட்டு:—இது உசுக - அடிகளை யுடையது; தலைவியின் வேறுபாடுகண்டு வருந்திய செவிலிக்கு, அறத்தொடு நிற்கும் பாங்கியின் கூற்ருக, ஆரிய அரசனுகிய பிரகத்தனுக்குத் தமிழ் அறிவிப்பதற்குக் கபிலராற் பாடப்பட்டது. இதில் மலைவளங்களும், இல்லற முறைகளும், தலைவன் தலைவியர்க்குளதாம் அன்புடைமையும், கற்பின் இன்றியமையாமையும் கூறப்பட்டுள்ளன. பல மலர்களின் பெயர்களை அழகுற அடுக்கிவைத்திருப்பது கற்போரைக் களிப்புறுத்தும். இதற்குப் பெருங்குறிஞ்சி யென்பதும் பெயர்.

இந்நூல்:"அன்னாய்வாழிவேண்டன்னையொண்ணுதல்" எனத்தொடங்கி, "குழுமலைவிடரக முடையவாலெனவே" என முடிந்துளது.

இயற்கைப் புணர்ச்சியும் பின்னர் நிகழும் புணர்ச்சிகளுக்கு நிமித்தங்களும் கூறலின், இதற்குக் குறிஞ்சியென்று பெயர் கூறினர். இது "புணர்தல் பிரிதல்" என்ற தொல்காப்பியம் அகத்திணையியல் சூத்திரத் துரையானறிக. இனி, நிலனும் பொழுதுமாகிய முதற்பொருளானும், தெய்வம் உணுமாமுதலிய கருப்பொருளானும் குறிஞ்சித்திணைக் குரியனவே கூறலின் அப்பெயராயிற் றென்றுமாம்.

"குன்றுகெழுநாடனெம் விழைதருபெருவிறல்
உள்ளத்தன்மை யுள்ளினன்கொண்டு
சாறயர்ந்தன்ன மிடாஅச்சொன்றி
வருநர்க்குவரையா வளநகர்பொற்ப
மலரத்திறந்த வாயில்பலருணப்
பைந்நிணமொழுகிய நெய்ம்மலியடிசில்
வசையில்வான்றிணைப் புரையோர்கடும்பொடு
விருந்துண்டெஞ்சிய மிச்சில்பெருந்தகை
நின்னோடுண்டலும் புரைவதென்றாங்
கறம்புணையாகத் தேற்றிப்பிறங்குமலை
மீமிசைக்கடவுள் வாழ்த்திக்கைதொழுது"

இவ்வடிகள், இல்லறமுறைகளை இனிதி னடாத்துவார் விருந்தோம்பு மேன்மை விதந்தோதியன.

"மாசறுசுடர் நுதல் நீவிநீடுநினைந்(து)
என்முகநோக்கி நக்கனன் அந்நிலை"

"துனை இயமாலை தன்னுதல்காணூஉ
நேரிறைமுன்கை பற்றிநுமர்தர
நாடறிநன்மண மயர்கம்பின்னாட்
கலங்கலோம்புமின் இலங்கிழையீரென
ஈரநன்மொழி தீரக்கூறித்
துணைபுணரேற்றின் எம்மொடுவந்து
அஞ்சாமுழவின் மூதூர்வாயில்
உண்டுறைநிறுத்துப் பெயர்ந்தனனதற்கொண்(டு)
அன்றையன்ன விருப்போடென்றும்
இரவரன்மாலைய னேவருதோறும்
காவலர்கடுகினுங் கதனாய்குரைப்பினும்
நீதுயிலெழினும் நிலவுவெளிப்படினும்
வேய்புரைமென்றோ ளின்றுயிலென்றும்
பெறாஅன்பெயரினு முனியலுறாஅன்"

இவை, தலைவன் தலைவியினிடத்தே தலையளிவைத்த தன்மையைச் சாற்றும்.

"மாதருமடனும் ஓராங்குத்தணப்ப
இருவேமாய்ந்த மன்றலிதுவென
நாமறிவுறாஅலிற் பழியுமுண்டோ
ஆற்றின்வாரா ராயினுமாற்ற
ஏனையுலகத்து மியைவதானமக்கென
மானமர்நோக்கங் கலங்கிக்கையற்(று)
ஆனாச்சிறுமைய ளிவளுந்தேம்பும்"

"பழூவும்பாந்தளும் உளப்படப்பிறவும்
வழூவின்வழாஅ விழுமமவர்
குழூமலைவிடாக முடையவாலெனவே"

"மாயவரவினியல்பு நினைஇத்தேற்றி
நீரெறிமலரிற் சாஅயிதழ்சோரா
ஆகத்தரிப்பனி யுறைப்பநாளும்
வலைப்படுமஞ்ஞையி னலஞ்செலச்சாஅய்
நினைத்தொறுங்கலுழு மாலிவளே ......"

இவற்றில் "மாதருமடனும்" என்பதுமுதல் "தேம்பும்" என்றவரையில் தலைவியின் கற்பியல்பும், ஏனைய வடிகளில் இன்ப அன்பின் றன்மையும் இனிது தோற்றுதல் அறிக.

"ஒண்செங்காந்த ளாம்பலனிச்சம்
தண்கயக்குவளை குறிஞ்சிவெட்சி" எனத்தொடங்கி,

"அரக்குவிரித்தன்ன பரோம்புழகுடன்" என்றவரையில் கூஅ-வகைப்பட்ட பூக்களைக் கூறப்பட்டிருப்பது காண்க.

மாலைக்காலத் தியல்பு கூறும்வழி, பாம்புதன் மாணிக்கத்தைக் கக்கி அம்மணி யொளியில் இரை தேடுவதைக் குறித்திருக்கிறது.

திரண்டகருத்து:—

"அன்னையே நீவாழ்க; யான் கூறுவதைக்கேள்; நீயும் வருந்துகின்ருய்; இவளும் (தலைவியும்) நமக்கு மறுபிறப்பினும் இக்கூட்டம் கூடுவதொன்ருயிருந்ததெனக் கூறி ஆற்ருெணுமைய னேக்கங்கொண்டு மெலிகின்ருள்; யானும் (பாங்கி) வருந்தாநின்றேன்; நான் கூறுவதுகேட்டுச் சினங்கொள்ளற்க; நினதேவலின் யாம்சென்று தினைப்புனத்துப் பரண்மீதேறி, கிளிமுதலிய பறவைகளைக்கடிந்து தெண்ணீாருவி யாடிச்சுனையிலாடும்போழ்து, கண்சிவந்து போந்து கூந்தலை யீரம்புலர்த்திப் பலமலர்களையுந் தேடிக்கொணர்ந்து பாறையிற் குவித்துத் தழையை யுடுத்து மலர்களை மாலையாக்கிக் குழலின்மீ தணிந்து அசோகமரத்தடியில் நின்றேமாக, பெருவிறலுடையோன் (தலைவன்) குறுகி, மான் முதலியன வந்ததுண்டோவென வினவ, யாம் வாளாஇருக்க, பின்னர் அவன் எம்மீது நெருங்கிவந்த நாய்களின் குரைப்படங்க ஓட்டி நிற்கையில் ஆங்கோர் யானைவர யாம் பயந்து விரைந்து அவனைச்சார்ந்திருந்தேம்; அவனும் அம்புவிடுத்து யானையைப்போக்கினபின் யாம் ஆங்குள்ள கலங்கிய ஆற்றிற் கைகோத்திறங்கவே, தவறிக் கால் தளர்ந்து வருந்த, அதுகண்டு அப்பெரியோன் எம்மை யெடுத்தளித்து இவளை முயங்கலின், அவ்வழி இவளுள்ளத் தன்மையறிந்து, விருந்துண்டு எஞ்சிய மிகுதியை நீயிட யானுண்பதே உயர்வுடைத்தென்று கூறித் தேற்றி, வரைமிசை முருகக்கடவுளை வாழ்த்தி வஞ்சினம் வாய்மையுடன்கூறி அமர்ந்து களிறுதரு புணர்ச்சியைக் கழிப்பி, மாலைவாலும் ஈரநன்மொழி கூறி எம்மொடு துணைவந்து மூதூரின் பக்கத்தே நீர்த்துறையிடத்து விட்டுப்போயினன்; அதுதொடங்கி இரவில் வருகுவன்; சிலகாற்றடையுறினும் முனிவுருன்; இகந்து நீங்கலன். அவன் வரும் வழியின்கண் துன்பந்தருவன உளவென்று நினைதோறும் இவள் கண்ணீர்வார்ந்து கலுழ்வாள். இதுகாண் நல்வினை நிகழ்ந்தவண்ணம் என்ருள் பாங்கியென்க."

(தொடரும்)

பத்திராசிரியர்.

பாரதம்பாடிய பெருந்தேவனார்.

உலகிலே உயர்ந்தோரைப் பெரியார் என்று கூறுதல் இயல்பு. பெரியார் என்பது பெருமையினையுடையார் எனவிரியும் பௌத்த, சமண சமயிகள் பெரியாரைத் தேவர் என்பர்: திருத்தக்கதேவர், உதீசிதேவர் முதலிய பெயர்களை உதாரணமாகப் பார்க்கலாம். அவருள் நுண்ணறிவும் ஆற்றலும் மிக்குடையாரைப் பெருந்தேவனாரென்று அடைகொடுத்துக் கூறுவர். பெருந்தேவனார் என்னும் பெயரினை யுடையார் பல்லோராவர்: வீரசோழிய உரைகண்ட பெருந்தேவனார், கடுகுபெருந்தேவனார், கவிசாகரப் பெருந்தேவனார், தொண்டைநாட்டுப் பெருந்தேவனார், பாரதம்பாடிய பெருந்தேவனார் எனப்பலராவர். அவருள் ஈண்டு ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்டது பாரதம் பாடிய பெருந்தேவனாரேயாம். இவரைப்பற்றிப் பலர் பலவாறாகக்கூறுவர். அவற்றை ஒருங்கு திரட்டிக் காட்டுகிறேன்.

(1) மகாமஹோபாத்தியாய ஐயரவர்கள்:—இவர் தமிழில் பாரத கதையை உரையிடை யிட்டபாட்டுடைச் செய்யுளாக இயற்றிய ஆசிரியர்; இதனைத் தொல்காப்பியப் பொருளதிகாரத்திற்கு நச்சினார்க்கினியரெழுதிய உரையிற் பரக்கக்காணலாம். நற்றிணைமுதலிய தொகைகளிலுள்ள கடவுள் வாழ்த்துக்கள் இவராலேயே செய்யப்பட்டுள்ளன. (புறநானூறு பாடினோர் வரலாறு பக்கம்—அ)

(2) து. அ. கோபிநாதராவ், M. A. (Madras.) கடைச்சங்கப் புலவரென்று புகழ்பெற்ற பாரதம் பாடிய பெருந்தேவனார் தம் உத்தியோக பருவத்து முதலில்,

“வண்மையாற் கல்வியான் மாபலத்தா லாள்வினையால்
உண்மையாற் பாரா ளுரிமையாற் - திண்மையால்
தேர்வேந்தர் வானேறத் தெள்ளாற்றில் வென்றானோ
டியார்வேந்த ரென்பா ரெதிர்.”

“என்றோ ரசனைக் குறிக்கிறார்; இவ்வரசனிவரை வெகுமானித்து வந்தவனென்றும், அதற்காக அவனைப்புகழ்ந்து இவர் பாடினார் என்றும் ஊகிக்கப்படுகிறது; ஆயின் இவ்வேந்தன் இன்னான் என்று விளங்காவரை இப்பாட்டு ஒருவகையாலும் உபயோகப்படாது. இவன் யாவனென்பது சிலாசாசனங்களாலும், நந்தி கலம்பகத்தாலும் ஏற்படுகிறபடியால் இப்புலவர் காலம் நிர்ணயிக்கக்கூடியதா யிருக்கிறது. இதை ஒருவாறு நிச்சயிக்க முயலுவோம்” என்று தொடங்கி நந்தி கலம்பகத்தில் பாடப்

பட்டவன் நந்திவர்ம னென்றும், அவன் பல்லவ வம்சத்தானென்றும் இவன் தான் தெள்ளாற்றில் சில பகைவரைத் துரத்தி யடித்ததாயும், இவன் சோணாடு, கொங்கு, வேங்கடம், தொண்டைநாடு முதலியவற்றிற் கதிபதியென்றும், கலம்பகத்தால் அறியப்படுகிறதென்றும், சிலாசாசனங்களில் நந்திவர்ம்மன், நந்திவர்ம்மராஜா, நந்திப்போத்தரசர் தெள்ளாற்றெறிந்த நந்திப்போத்தரசர் என்று காணப்படுகிறதென்றும் கூறுவதால், இவ்வரசனையே தெள்ளாற்றில் வென்றானென்று பெருந்தேவனார் குறித்திருக்கவேண்டு மென்றும், இவ்வரசன் தந்தையாகிய தந்திவர்ம்மனென்பான் இரட்டவம்சத்தானாகிய மூன்றாம் கோவிந்தனென்பவனுக்குப் பகைவனாயிருந்து (கி. பி. 804) பிறகு இவ்வரசன் பேரத்தியாகிய அமோகவர்ஷன்மகள் சங்கரதேவியைத் தன் மகன் நந்திக்கு மணம் புரிவித்து வைத்தானென்பது சரித்திரசித்தமாகையால் முதல் அமோகவர்ஷன் காலமாகிய கி. பி. 814 - 876 ல் இருந்திருக்கவேண்டு மென்றும்; ஆகையால், பாரதம்பாடிய பெருந்தேவனாரும் கி-பி-ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியி லிருந்திருக்கவேண்டும் என்றும் எழுதி யிருக்கிறார்கள்.
(செந்தமிழ், தொகுதி 5-பக்கம் 61–64) (தொடரும்)

S. சோமசுந்தர தேசிகர்,
இலக்கணவிளக்க பரம்பரை.
திருவாரூர்.

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்."

இம்முதுமொழி, யாவரும் பாவும்மேவருஞ் சிறப்பினையுடைய ஔவையாரென்னும் நல்லிசைப்புலமை மெல்லியலார் தொகுத்தருளிய 'கொன்றைவேந்தன்' என்ற சிறந்த நீதிநூலில் கூறப்பட்டுள்ளது. இதன் பொருள்: தாயும் தகப்பனும் முதலில் அறிந்துகொள்ளும்படியான தெய்வமாம் என்பது. பிள்ளைகளுக்குத் தாய்தந்தையரைக் காட்டிலும் சிறந்த தெய்வம் ஒன்றும் கிடையாதென்னலாம். அவர்களிடத்துப் பிள்ளைகள் காட்டவேண்டிய விசுவாசத்தைக் காட்டிலும் சிறந்ததூஉம், தூயதூஉமாயதொன்று இவ்வுலகிலில்லை. புத்திரர் புத்திரிகள் தமது மாதாபிதாக்களைத் தெய்வத்தைப்போல நினைத்து அவர்களுக்குத் தொண்டுசெய்யக் கடமைப்பட்டுளோமென்று, அவர்களிடத்தில் அன்புபாராட்டி வரவேண்டும். ஒருவன் தெய்வமெனக்கொண்டு பக்தியோடு வழிபட்டொழுகுதற்குரிய சிறப்புடைய ஐங்குரவரில் தாய்தந்தையரே முதன்மையானவர். அவர்களைத்தெய்வத்தன்மையும் தெய்வாம்சமுமுடையவரென்று நூல்கள் கூறுகின்றன. இதுபற்றியன்றே,

"அரசனுவாத்தியான் தாய்தந்தைதம்முன்
நிகரில்குரவ ரிவரிவரைத்
தேவரைப்போலத் தொழுதெழுகவென்பதே
யாவருங்கண்ட நெறி." என முள்ளியார் என்ற மூதறிவாளரும்,

"குலமகட்குத்தெய்வங் கொழுநனேமன்ற
புதல்வர்க்குத் தந்தையுந்தாயும்." என, குமரகுருபர சுவாமிகளும் கூறியுள்ளார்.

இனி, தாய்தகப்பன்மாரை ஏன் தெய்வமாகக் கருதவேண்டுமெனின், சகல ஆன்மகோடிகளையும் காப்பாற்றுந் தொழில் சர்வசக்தியுடைய கடவுளுக்கே யுரியதாதலின், அத்தொழிலைச் செய்து குழந்தைகளைக் காப்பாற்றுகின்றவர் மாதாபிதாக்களே; ஆகையால், அவர்களையும் தெய்வமென மதித்து வழிபடல் வேண்டும்.

தாயானவள் நம்மைப் பத்துமாதம் கர்ப்பத்திற் சுமந்து, வருந்திப் பெற்று, நம்குழவிப்பருவத்தில் நமக்கு வியாதியால் யாதொருதுன்பமும் நேராவண்ணம் மருந்தளித்துக் காப்பாற்றுகின்றாள். மேலும், நம்மை ஈ எறும்பு முதலியன அணுகாமலும், நம்மேனிவாடாமலும் இருக்கப் பாதுகாத்து நாம் பசியா லழுதகாலத்து நம் வயிறாரப் பாலூட்டியும் நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாய் வளர்த்துவருகின்றாள். அருங்கக்கூறுமிடத்து நாம் நம்மைக் காத்துக்கொள்வதற்கு ஏற்ற சக்தி நமக்கு வரும்வரைக்கும் தாயானவள் நம்மைக் கன்றுக்கிரங்கும் கறவைபோல நெஞ்சிரங்கிக் கண்ணை யிமைகாப்பதுபோல் காத்து வருகின்றாள்.

இனி, தந்தையோவெனின், நாம் உலகத்தில் கீர்த்தியோடு வாழவேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு இடையில் நேரக்கூடிய கஷ்டங்களையும் பாராட்டாமல், அநேகதிரவியங்களைச் செலவுசெய்து, நாம் தீநெறிக்கட்சென்று பாவகாரியங்களைச்செய்து இம்மையி லிராஜதண்டனையும் மறுமையி லெமதண்டனையும் அனுபவியாமல் நன்னெறியிற் புக்குப் புண்ணியத்தைச்செய்து இம்மையிற்புகழும் மறுமையில் சொர்க்கபோகமும் அடையும்படி கல்விமுதலியவற்றைக் கற்பிக்கின்றான். நாம் உண்ணும் உணவும் உடுக்கும் உடையும் அவனுடையனவே. இங்ஙனம் நமக்கு வேண்டுவனவற்றைக் குறைவின்றிச் செய்து நம்மை உபசரிக்கின்ற தாய்தகப்பன்மாரைக் காட்டிலும் நமக்குத் தகுந்த உறவினர்யார்? ஒருவருமில்லை.

(தொடரும்)

நா. ராமசாமி நாயகர்,
கூத்தப்பாக்கம்.

தலைவலிச்சிகிச்சை (பொது) விதி.

(௭-வது மதியிலுள்ளதன் தொடர்ச்சி.)

(௧௧) சுக்கு, திப்பிலி, மஞ்சள், சதகுப்பை, மிளகு, கற்பூரம் இவைகளை ஓர் நிறையாக எடுத்து குன்றிமணியிலே ரசம் விட்டு மைபோல் அரைத்துத் துணியில் தடவி உருட்டிக்கொளுத்திப் புகையை ஆக்கிராணிக்கலாம். (௧௨) அபினி, சுக்கு, சாம்பிராணி, கஸ்தூரி, மஞ்சள் இவைகளை அரைத்துச் சூடுகாட்டிப்பற்றுப்போடலாம். (௧௩) குங்குமப்பூத்தூள் மூக்கில் ஆக்கிராணிக்கலாம். (௧௪) சுரத்துடன் தலைவலி, அல்லது, சிரச்சூலை வியாதிகளுக்கு வெந்நீர் ஒத்தடம்போட்டுக் கற்பூரத்தைலத்தைமேலுக்குப்போடச் சௌக்கியத்தைத்தரும். நடத்தும் விதம்:—நன்றாய்க்கொதித்த வெந்நீரில் மடிப்பாக ௩ கம்பளித்துண்டுத் துணியை நனைத்துப் பிழிந்து, நோயுள்ள இடத்திலும், பிடரியிலும் போடவும். துணி ஆறிய உடன் மற்றொருதுணியைத் தயாராகவைத்திருந்து முன்போலவே மேலுக்குச் சூட்டுடன் போடவும். இவ்விதம் அடிக்கடி விடாமல் 2-மணி நேரம் ஒத்தடமிடவும். பிறகு நல்ல ஆகாயமுள்ள இடத்தில் பிணியாளி உலாவிக்கொண்டும் அமைதியாகவும் இருக்கவேண்டுவதுடன் வெளிச்சத்தைப் பார்க்கக்கூடாது இடிச்சப்தமும் உரத்த பேச்சு மாகாது.

மேற்குறித்த சிகிச்சைகளைக் கிரமத்துடன் செய்து குணத்துக்கு வாராவிடில், அடியில்கண்டிருக்கும் எனது விலாசத்துக்கு வியாதியின் தன்மைகளைத் தெளிவாக எழுதினால், அதற்கு வேண்டிய வேறு முறைகளை யெழுதி யனுப்புவிப்பேன்.

எனதிடம் தயாரில் இருக்கிற மருந்துகளாவன:—

சிரோரத்தின நசியத்தைலம்.

சிரோரத்தின ஸ்நானத்தைலம்.

இவைகளினால் அடையும் சௌக்கியம் பழய சுரம், வாத ரோகம், நாட்பட்ட மண்டையிடி, பீனிசம், செவிநோய் இவைகள் நீங்கிவிடும். சுய அனுபவமுறை.

சி. வீரட்டநாதப்பிள்ளை,
வைத்தியர் குளத்துமேடு, புதுவை.

14-2

புதுவையைச்சார்ந்த முதலியார்பேட்டை,
சென்னை ஆனந்தாசிரம சாதுமகா சங்கக்
கிளைச்சங்கத்தின் வருஷோற்சவம்.

நிகழும் காளயுக்தி ௵ ஆனி ௴ ௯௳ இரவு ௭ - மணிக்கு மேற்படி சங்கமூர்த்திகளான ஸ்ரீலஸ்ரீ காபாத்திர சிவப்பிரகாச சுவாமிகள் திருவுருவப்படம் வீதியுற்சவம் செய்தனர். ௧௦௳ ஆதிவாரம் முற்பகல் பிற்பகல்களிலும், ௧௧௳ சோமவாரம் பிற்பகலிலும் பலநூல் வல்லாரைக்கொண்டு அரிய பெரிய பலவிஷயங்களை உபந்நியசிக்கச் செய்தனர். பின்னர் உபந்நியாசகர்களுக்கு உபசாரஞ்சொல்லச் சபை மங்கலவாழ்த்துடன் இனிது நிறைவேறிற்று. இவ்வாறு ஊர்தோறும் ஒவ்வோர் சபைகள் வைத்து ஆங்காங்குள்ளார் கவனத்துடன் நடத்தி வருவார்களானால் எல்லோரும் கல்வி அறிவு ஒழுக்கங்களிற் சிறந்து கனம் பெறுவார்களே இது எவ்வளவு மேன்மையான காரியம். இனியேனும் பலகிராமங்களில் கூத்து முதலியவற்றிற்குப் பணஞ் செலவழிப்பதை விலக்கி இத்தகைய காரியங்களில் முற்படுவார்களாகுக. சுபம்.

அறிவிப்பு.

நமது "தமிழ் மகவு" ஒவ்வொரு தமிழ் மாதங்களிலும் ௨௦௳க்குள் அதன் சந்தாதாரர்கள் வசம் சேரும். அவ்வாறு சேராவிடின் உடனே அங்கங்குள்ள போஸ்டு மானேஜருக்குத் தெரிவித்துக் கொள்ளவேண்டும். மாதந்தோறும் கவனமாய் எல்லா விலாசங்களையும் இருமுறை பார்வையிட்டே பத்திரிகைகள் அனுப்பப்படுகின்றன. பத்திரிகை மேற்படி தேதிக்குள் வந்து சேராவிடின் அது எமது குறையென் றெண்ணற்க. போஸ்டுகளிலும் விசாரித்துக் கிடைக்காவிடின், பத்திரிகை மானேஜருக்கு எழுதினால் பெறலாம்.

விலாசம்:— "புதுவைத் தமிழ்ச் சங்கம்" ஆபீஸ்
நெ. 48, ரங்கப்பிள்ளை வீதி
புதுவை.